**அசல் வழக்கு எண்.35/2023**

பெயர் – திருமதி.லைலா

வயது –42

க/பெ. – அலெக்சாண்டர்

ஊர் –கடம்பத்தூர்

பி.வா.சா.1

**நாள். 18/12/2023**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமுலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் எனது பிரமாண வாக்குமுலத்தினை நான் ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமுலத்தில் 10 பத்திகள் உள்ளது என்றால் சரிதான் பிரமாண வாக்குமுலத்திலுள்ள 10 பத்திகளில் உள்ள சங்கதிகள் குறித்தும் எனக்கு நன்கு தெரியும். நான் 12–ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன் எனக்கு ஆங்கிலம் எழுத, படிக்க தெரியும்.

2. எனது பிரமாண வாக்குமுலத்தில் 1ம் பத்தியில் 2வது வரியில் "Plaintiff only to harras me hence the above suit is to be dismissed" என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதற்குண்டான அர்த்தம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் வாதியின் பெயர் தெரியுமா என்றால் படித்தேன் தற்போது ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் வாதி என்னிடம் என்ன தொல்லை செய்தார் என்றால் எனது கணவர் பெற்ற கடனை திருப்பி கொடுக்க வேண்டுமென்று என்னை தொல்லை செய்தார். எப்போது வாதி தொல்லை கொடுத்தார் என்றால் கோர்ட் முலமாக அறிவிப்பு அனுப்பி தொல்லை செய்தார் என்னிடம் அதற்கு முன்பு யாரும் வந்து எந்த கடன் தொகையும் கேட்கவில்லை.

3. நான் கதவு எண்.4/128, மகாத்மா காந்தி நகர், பழைய வெண்மனம் புதூர், கடம்பத்தூர் கிராமத்தில் குடியிருக்கின்றேன் அந்த விலாசத்தில் 20 ஆண்டுகளாக குடியிருக்கின்றேன். வா.சா.ஆ.3 வாதி வழக்கறிஞர் முலமாக அனுப்பப்பட்ட அறிவிப்பு பெறப்படாமல் திருப்பப்பட்ட அஞ்சல் உறை ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கும் விலாசமும் எனது சாட்சியத்தில நான் குடியிருப்பதாக மேலே குறிப்பிட்டுள்ள விலாசமும் ஒன்றுதான். வா.சா.ஆ.3

ஆவணம் வழக்கறிஞர் அறிவிப்பு பெற மறுக்கப்பட்டு திருப்பப்பட்டுள்ள அஞ்சலக உறை என்றால் சரிதான் ஆனால் அந்த கடிதம் நான் வீட்டில் இல்லாத சமயத்தில் வந்துள்ளபடியால் திருப்பப்பட்டுள்ளது நான் வீட்டிலிருந்த சமயத்தில் வந்திருந்தால் கண்டிப்பாக பெற்றிருப்பேன்.

4. பொதுவாக கடிதம் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருந்தால் பெறுவதற்கு மறுக்கப்பட்டால்தான் "Refused" என்று குறிப்பிடப்படும் நபர் இல்லை என்றால் "No such person " என்றுதான் குறிப்பிடப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் "Refused" என்று குறிப்பிடப்பட்டுள்ளபடியால் நான் வாங்க மறுத்த காரணத்தினால் கடிதம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல எனது மகளுக்கு கை அடிபட்ட காரணத்தினால் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன் ஆகையால் அறிவிப்பு பெற இயலவில்லை. நான் கூறிய சங்கதிகள் சட்டத்திற்கு புறம்பானவை எனது வழக்கறிஞரின் ஆலோசனையை கேட்டுகொண்டு சில வழக்குகளின் அறிவிப்பினை பெற்றுள்ளேன் சில வழக்குகளில் அறிவிப்பினை பெறவில்லை என்றால் சரியல்ல.

5. எனக்கு 24.08.1998 ம் தேதி திருமணம் நடைபெற்றது. எனது பிரமாண வாக்குமுலத்தில் எனது திருமணத்திற்கு பின்பு எனக்கும், எனது கணவருக்கும் நல்ல உறவு முறை இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் அவரது உடைமைகள், செயல்கள் ஆகியவற்றை என்னுடன் பகிர்ந்துகொள்ளமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 17.01.2008 ம் தேதி முதல் குழந்தை பிறந்தது எனது குழந்தையின் பெயர் சந்தியா யோகேஷ்வரி ஆகும். எனது மகள் திருவள்ளுரிலுள்ள RM Jain பள்ளியில் 10 ம் வகுப்பு படிக்கின்றார்.

6.எனக்கும், எனது கணவருக்கும் 10 ஆண்டுகள் கழித்து குழந்தை பிறந்துள்ள காரணத்தினால் எனக்கும், எனது கணவருக்கும் திருமணத்திற்கு பின்பு நல்ல உறவு முறை இல்லை என்று கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல அவர் என்னுடன் அவரது சொந்த விவரங்களை

பகிர்ந்துகொள்ளமாட்டார் ஆனால் நாங்கள் ஒரே வீட்டில்தான் கணவன், மனைவியாக வாழ்ந்துவந்தோம். தற்போது நான், எனது மாமனார் மற்றும் எனது மகள்தான் வசித்து வருகின்றோம். எனது கணவர் எனது மாமனாருக்கு ஒரே மகனாவார். எனது மாமனாரின் காலத்திற்கு பின்பு அவரது சொத்துக்கள் அனைத்தும் அவரது ஒரே வாரிசான எனது கணவருக்குத்தான் சேருமென்றால் சரிதான்.

7. எனது கணவர் போக்குவரத்து துறையில் நடத்துனராக பணிபுரிந்தார். எனது கணவர் இறந்த சமயத்தில் அவர் வேலையில் இல்லை அவர் வேலையிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார். எனது கணவர் பணியிடத்தில் முறைகேடு செய்தபடியால் அவரை வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார் என்றால் சரியல்ல அவர் குடித்துவிட்டு ஒழுங்காக வேலைக்கு செல்லாத காரணத்தினால்தான் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

8.எனது பிரமாண வாக்குமுலத்தில் 3 வது பத்தியில் எனது கணவர் வாங்கிய கடனை கொடுக்கும் பொறுப்பு எனக்கு இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் பொறுப்பு என்று நான் குறிப்பிடவில்லை எனது கணவர் கடன் வாங்கியது பற்றி எனக்கு தெரியாது அவர் சம்பாதித்த சொத்து எதுவும் என்னிடம் இல்லை நான் கூலி வேலைதான் செய்கின்றேன் என்னால் கடன் கட்ட முடியாது. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் குடும்ப செலவிற்காகத்தான் கடன் வாங்கியதாக கடனுறுதிபத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல குடும்ப செலவிற்காக அவர் கடன் எதுவும் பெறவில்லை.

9. எனது கணவர் வாதியிடம் கடன் பெற்ற சமயத்தில் நாங்கள் கூட்டு குடும்பமாகத்தான் இருந்தோம் எனது கணவர் பெற்ற கடன் தொகை குடும்பத்திற்காகத்தான் செலவழிக்கப்பட்டது எனது கணவர் இறந்துவிட்ட காரணத்தினால் நான் தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது கணவர் குடும்பத்திற்காக எதுவும் செய்தது கிடையாது கடன்

பெற்றது கிடையாது கடைசி காலத்தில் அவர் குடித்துவிட்டு உடல் நிலை சரியில்லாமல் 2020 – 2021 ஆம் ஆண்டில் இருந்தபோது நாங்கள் அவரை அரசு பொது மருத்துவமனையில் வைத்து சிகிச்சை செய்தோம்.

10. எனது பிரமாண வாக்குமுலத்தில் வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டு போலியாக தயார் செய்யப்பட்டு என்னிடம் பணம் பறிப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் அதனை நிருபிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பம் கிடையாது ஆகையால் அவ்வாறு கூறியுள்ளேன்.

11. எனக்கும், எனது கணவருக்கும் குழந்தைகள் கிடையாது ஆகையால் நாங்கள் தத்தெடுத்துதான் குழந்தை வளர்த்து வருகிறோம் என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் குழந்தையின் பிறப்பு சான்றிதழை போலியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது கணவர் பெற்ற கடனுக்கு நான் பொறுப்பாளி என்றால் சரியல்ல. குடும்பம் என்பதில் கணவன், மனைவி, மகள் மற்றும் எனது மாமானர் ஆகியோர் உள்ளடக்கம் ஆகையால் வாதியிடம் எனது கணவர் பெற்ற கடன் தொகையினை குடும்பமாக நாங்களும் அனுபவித்த காரணத்தினால் கடனை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் பெற்ற கடனை கொடுப்பதற்கு எனக்கு வசதியுள்ளது ஆகையால் இவ்வழக்கு தொகையினை நான் கொடுக்க கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

12. வாதியிடம் எனது கணவர் பெற்ற கடனை பற்றி எனக்கு நன்கு தெரியும் ஆகையால்தான் சில அறிவிப்புகளை பெற்றுள்ளேன் சில அறிவிப்புகளை மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.